

# ஒன்ராறியோவில் வாக்களித்தல்

மாகாண மற்றும் மாநகரச் சபைத் தேர்தல்களில் வாக்களிப்பது தொடர்பான உங்களின் வழிகாட்டி.

Elections Ontario

# ஒன்ராறியோவில் வாக்களித்தல்

ஒன்ராறியோவின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தீவிரமாகப் பங்கெடுங்கள்.

## மாகாண சபைத் தேர்தல் எவ்வாறு செயல்படுகிறது?

- ஒன்ராறியோவின் முதல்வர் தேர்தல் ஒன்றை அறிவிப்பது தொடர்பாகத் தீர்மானம் எடுத்தவுடன் மாகாணச் சபைக்கான தேர்தல் தொடங்குகிறது.
- Lieutenant Governor (அரசரின் பிரதிநிதி) தேர்தல் ஆணையத்தில் கையெழுத்திடுகிறார், அது தேர்தலின் அதிகாரப்பூர்வத் தொடக்கத்தைக் குறிக்கிறது.
- ஒன்ராறியோ 124 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் உள்ள வேட்பாளர்கள் வாக்குச்சீட்டில் பதிவுசெய்து பிரச்சாரத்தைத் தொடங்குவார்கள்.
- பின்னர் வாக்காளர்கள் தங்கள் தேர்தல் தொகுதியில்தாங்கள் விரும்பும் உள்ளூர் வேட்பாளருக்கு வாக்களிப்பார்கள். அதிக எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெறும் வேட்பாளர் தங்கள் தேர்தல் தொகுதிக்கான மாகாண சபை நாடாளுமன்ற உறுப்பினராகப் (MPP) பதவியேற்கிறார்.
- அதிக எண்ணிக்கையிலான தேர்ந்தெடுக்கப்பட்ட MPPகளைக் கொண்ட அரசியல் கட்சி பொதுவாகப் புதிய மாகாண சபை அரசாங்கத்தை அமைக்கும்.
- ஒன்ராறியோ மாகாணத்தை நிர்வகிக்கும் சட்டத்தை இயற்றுவதற்காக ஒன்ராறியோச் சட்டமன்றத்தில் MPPக்கள் சந்திக்கிறார்கள்.

## மாகாண சபைத் தேர்தலில் யார் வாக்களிக்கலாம்?

மாகாண சபைத் தேர்தல் ஒன்றில் வாக்களிப்பதற்கு நீங்கள்:

- 18+ தேர்தல் தினத்தன்று 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்;
- ஒரு கனேடியப் பிரஜையாக இருக்க வேண்டும்; மற்றும்
- ஒரு ஒன்ராறியோக் குடியிருப்பாளராக இருக்க வேண்டும்.

## வாக்களிக்கப்பதற்கு நீங்கள் பதிவு செய்துள்ளீர்களா?

**ஆம்** - மாகாணச் சபைத் தேர்தல் அறிவிக்கப்படும்போது, எப்போது, எங்கு வாக்களிக்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கும் வாக்காளர் தகவல் அட்டையைத் தபாலில் நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

**இல்லை** - உங்கள் வாக்காளர் தகவல்களை நீங்கள் இற்றைப்படுத்தலாம் அல்லது சேர்க்கலாம்:

- இணையத்தில், **RegisterToVoteON.ca** இல்;
- நேரில், உங்களது உள்ளூர்த் தேர்தல் அலுவலகத்தில்; அல்லது
- நீங்கள் வாக்களிக்கச் செல்லும்போது, நேரில்.

உங்களது பெயர் மற்றும் வீட்டு முகவரியைக் காட்டும் ஒரு அடையாள அட்டை உங்களுக்குத் தேவைப்படும். ஏற்றுக்கொள்ளப்படும் அடையாள அட்டைகளுக்கான பட்டியலை **RegisterToVoteON.ca/IDtoregister**இல் பாருங்கள்.

## நீங்கள் வாக்களிக்கக்கூடிய வழிகள் யாவை?

பின்வரும் வழிகளில் நீங்கள் வாக்களிக்கலாம்:

- தபால் மூலம்
- நேரில், உங்களது உள்ளூர்த் தேர்தல் அலுவலகத்தில்; அல்லது
- நேரில், முன்கூட்டியே வாக்களிக்கும் நிலையமொன்றில்
- நேரில், தேர்தல் தினத்தன்று
- வாக்களிக்க உதவிசெய்யும் தொழில்நுட்பத்துடன் உங்களது உள்ளூர்த் தேர்தல் அலுவலகத்தில்

## நேரில் வாக்களிக்கும் முறை

- முன்கூட்டியே வாக்களிக்கும் நிலையம் ஒன்றுக்கு, உங்கள் உள்ளூர் தேர்தல் அலுவலகத்துக்கு அல்லது தேர்தல் தினத்தன்று உங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு மையத்துக்குச் செல்லுங்கள்.
- உங்கள் வாக்குச்சீட்டைப் பெறுவதற்கு உங்கள் அடையாள அட்டையைத் தேர்தல் அதிகாரியிடம் காட்டுங்கள்.
- வாக்களிப்புத் திரைக்குப் பின்னால் சென்று, ஒரே ஒரு வேட்பாளரை மட்டுமே தேர்ந்தெடுக்கும் Xஐ உங்கள் வாக்குச்சீட்டில் குறியுங்கள்.
- வாக்குப் பெட்டியில் அல்லது tabulatorஇல் செருகுவதற்காக, அடையாளமிடப்பட்ட உங்கள் வாக்குச்சீட்டை வாக்குச்சாவடி அதிகாரியிடம் திருப்பிக் கொடுங்கள்.
- வாழ்த்துகள்! வெற்றிகரமாக நீங்கள் வாக்களித்து விட்டீர்கள்!

## மாநகரச் சபைத் தேர்தல்களில் வாக்களித்தல்

மாநகர சபை உறுப்பினர்கள், மாவட்டச் சமூக சேவைகள் நிர்வாகச் சபை (DSSAB) உறுப்பினர்கள் மற்றும் பாடசாலைச் சபை அறங்காவலர்களுக்கான தேர்தல்கள் ஒன்ராறியோவில் உள்ள மாநகர சபைத் தேர்தல்களில் அடங்குகின்றன.

Register to Vote

வாக்காளர் பட்டியலைத் தேர்தல்கள் ஒன்ராறியோ (Elections Ontario) பராமரிக்கிறது, இது ஒன்ராறியோவில் மாகாண மற்றும் மாநகர சபைத் தேர்தல்கள் இரண்டிற்குமான வாக்காளர் பட்டியலில் இடம்பெற உங்களை அனுமதிக்கிறது. உங்கள் தகவல்களைச் சரிபார்க்க, இற்றைப்படுத்த அல்லது சேர்க்க **RegisterToVoteON.ca** ஐப் பார்வையிடுங்கள்.

## என் வயது 18க்குக் குறைவானதாக இருந்தால் என்ன செய்வது?

- நீங்கள் 16 அல்லது 17 வயதுடையவராகவும், கனேடியக் குடிமகனாகவும், ஒன்ராறியோவில் வசிப்பவராகவும் இருந்தால், Ontario Register of Future Voters (ஒன்ராறியோவின் எதிர்கால வாக்காளர் பதிவேடு) இல் உங்களை நீங்கள் சேர்த்துக் கொள்ளலாம்.
- உங்களுக்குப் 18 வயது ஆனதும், வாக்காளர் பட்டியலில் நீங்கள் தானாகவே சேர்க்கப்படுவீர்கள்.

**வாக்களிப்பதற்கான தயார் நிலையில் இருப்பதற்கு இன்றே வாக்காளர் பட்டியலில் இடம் பெறுங்கள்.**

**elections.on.ca**

மேலதிகத் தகவல்களுக்கு **elections.on.ca** ஐப் பார்வையிடுங்கள்.

**elections.on.ca**
info@elections.on.ca
1.888.668.8683 | **TTY** 1.888.292.2312

@electionsON | @electionsONfr

Elections Ontario